**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 148/2021**

திரு.முத்துரத்தினம் (P.W. –1) **18.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான்காவது பத்தியில் சொல்லப்பட்டுள்ளவாறு சொத்துக்கள் பாகம் பிரிந்து உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு பிரிந்து வந்த பாகத்தில் வடக்கோட்டில் பொது கிணறும் பொது தடமும் உள்ளது என்றால் சரி. கிணறு தற்போது மூடப்பட்டுள்ளதாக சாட்சி தன்னிச்சியாக கூறுகிறார். எங்களுக்கு பிரிந்து வந்த பாகத்தின் மேற்கோட்டில் எங்களுடைய சொத்தில் வேலி அமைத்துள்ளோம் என்றால் சரி. தடத்தை விட்டு அமைத்துள்ளோம் தடம் தனியாக உள்ளதா என்றால் ஆமாம். பிரதிவாதிகளும் அதே போல் அவர்களுடைய பாகத்தை ஒட்டினார் போல் தடத்தை விட்டு வேலி நாங்கள் அமைத்தவாறு அமைத்துள்ளார்கள் என்றால் வேலி அமைத்துள்ளார்கள். கிணறுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தையும் சேர்த்து வேலி அமைத்து விட்டார்கள்.தவறாக சாட்சியம் அளிக்கிறேன் பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு மட்டும்தான் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் தவறு.

2. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு அவர் இரு தரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பி டவுன் சர்வேயர் உடன் சொத்துக்களை அளந்த போது நான் உடன் இருந்தேன் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்த பிறகு மீண்டும் நியமனம் பெற்று அளவீடு செய்யப்பட்ட போதும் நான் உடன் இருந்தேன் என்றால் சரி. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையின்படி பிரதிவாதிகளுக்கு உரிய சொத்து

1.97 1/2 சொத்துக்கள் உள்ளதாகத்தான் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. 22.01.2026 ம் தேதிய நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் க.ச.எண் 353/2 ல் 2.0 ½ ஏக்கர் சொத்தும், 353/3 ல் 1.99 ¾ ஏக்கர் சொத்துக்கள் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு ஆட்சேபனை செய்துள்ளேன்.

3. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் மூன்று சர்வே எண்களையும் அளந்து பார்த்தபோது அந்த சொத்துக்களின் மொத்த விஸ்தீரனம் 6.29 ஏக்கர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் ஆவணங்களின்படி 6.36 ஏக்கர் சொத்து உள்ளது 3.3 விஸ்தீரணம் 6.29 ஏக்கர் தான் பூமியில் உள்ளது. எங்களுடைய சொத்தில் தான் நான்கு சென்ட் அதிகமாக உள்ளதாக நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நீதிமன்ற ஆணையாளர் தவறாக சொல்லி உள்ளார். என்னுடைய தகப்பனார் என்னுடைய தம்பிக்கு க.ச.எண்.331/4 சொத்திற்கு செல்வதற்காக மேற்படி பொதுத்தடத்தை தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப் படுத்தி கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. என்னுடைய சகோதரர் பெயர் நடராஜ் என்றால் சரி. என்னுடைய தகப்பனார் பெயர் என்னவென்றால் சின்னச்சாமி.

4. என்னிடம் காட்டப்படும் 16.9.2011 ஆம் தேதி ஆவணத்தில் என்னுடைய தகப்பனார் என்னுடைய சகோதரருக்கு க.ச.எண்.331/4 ல் உள்ள சொத்து இருக்கு இந்த தாவா தடத்தை பயன்படுத்தி கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. 16.09.2011 ஆம் தேதி நடராஜ் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–1. அந்த தடத்திற்கு என்னுடைய தம்பியின் சொத்தில் உள்ள வீட்டிற்கு

மாநகராட்சி குடிநீர் பைப் அமைத்துள்ளார்கள் என்றால் சரி. என்னுடைய தம்பி அதை மாற்றிக்கொள்ள தயாராக உள்ளார் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார்.

5. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி பிரதிவாதிகளுக்கு பாகம் மூலம் வந்த சொத்துக்கள் முழுவதும் அவர்களிடம் இல்லை. எங்களுடைய பாகத்தில் அதிக சொத்துக்கள் பூமியில் உள்ளது என்றால் தவறு. இரண்டாவது நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் தவறு என்று சரி செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையிலும் எங்களுடைய பாகத்தில் நான்கு செண்ட் அதிகமாக உள்ளதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அதற்கு நாங்கள் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளோம்.

6. ஏற்கனவே பாகம் மூலம் அந்த சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு அரை சென்ட் நிலம் குறைவாக உள்ளது. எங்களுக்கு பிரிந்த பாகத்தில் நான்கு செண்ட் அதிகமாக உள்ளதால் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு பொய்யான தாவா தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/–கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.